# நாவைப் பேண சில வழிகள் -1

حفظ اللسان

Moulaviya M.Y.Maziyya B.A(Hons)

நாவு இறைவனின் அருட்பாக்கியங்களில் ஒன்று. அதனால் மனிதனும் இதர படைப்பினங்களும் அடைகின்ற நன்மை அளவிடமுடியாதவை. அதே போன்று அதனால் ஏற்படுகின்ற விபரீதங்களும், கெடுதிகளும் அதிகமானவை.

உடலுறுப்புகளுக்கு பௌதீகக் காரணிகளின் அடிப்படையில் நோய்கள் ஏற்படுவது போல, ஆன்மீகக் குறைபாட்டினால் அவற்றுக்கு ஏற்படுகின்ற நோய்கள் பல. இந்தப் பின்னணியில் நாவுக்கும் சில நோய்கள் ஏற்படுகின்றன. பொய் சொல்லுதல், சபித்தல், ஏளனம் செய்தல், பரிகசித்தல், போன்றன அவற்றிற் சில.

எல்லா நோய்களுக்கும் அல்லாஹ் நிவாரணியை அமைத்து வைத்துள்ளான்; வயது முதிர்வு, மரணம் இரண்டையும் தவிர, இந்த வகையில் நாவில் ஏற்படுகின்ற நோய்களுக்கும் அல்லாஹ் நிவாரணியை வைத்துள்ளான். இது கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும். இன்று இப்பகுதி கைவிடப்பட்டிருக்கிறது. இது மிக விரிவாக எழுதப்பட வேண்டிய அம்சமாகும். ஆயினும் நாம் இங்கு நாவினால் ஏற்படுகின்ற விபரீதங்களிலிருந்து காத்துக்கொள்வதற்காகக் கையாள வேண்டிய சில வழிகளை மட்டுமே சுருக்கமாக நோக்குவோம். அவை வருமாறு;

1) அல்லாஹ்வுடைய மகத்துவம், அவனுடைய திருநாமங்கள் மற்றும் பண்புகள் பற்றி அறிந்துகொள்ளல்; அவனை ஓர்மைப்படுத்தி வணங்குதல்.

அவனுடைய வல்லமையை மனிதர் அறிந்துகொள்வதானது உள நோய்களுக்கு நிவாரணமும், ஏனைய உறுப்புக்களைப் பாவச் செயல்களிலிருந்து கட்டுப்படுத்தக் கூடியதுமாகும்.

2) இறையச்சமுடையோருக்கு அல்லாஹ் சுவனத்தில் தயார் செய்து வைத்துள்ள நற்கூலிகளைப் பற்றிப் பேசுகின்ற குர்ஆன்வசனங்கள், ஹதீஸ் போன்றவற்றை அறிந்து கொள்ளல்.

ஏனெனில், அல்லாஹ் விரும்புவது போன்று சுவனத்தையும் அதன் இன்பங்களையும் அறிந்து விசுவாசம் கொள்வோர், எல்லா இன்பங்களையும் விட சுவனத்தின் இன்பங்களுக்கு முன்னுரிமை கொடுப்பர். சுவனத்தையும் அதன் இன்பங்களையும் அறியாதோர், இன்பங்களைத் தேடி அலைகின்ற போது புறம் பேசுதல், இட்டுகட்டடல், சபித்தல், கோள்சொல்லல் போன்ற நாவினால் செய்யப்படுகின்ற கெடுதிகளின் பக்கம்

ஷைத்தான் வழிகாட்டி விடுகின்றான். அவன் அவற்றை இன்பங்கள் போன்று அழகுபடுத்திக் காட்டுகின்றான்.

யார் நாவின் நன்மைகளில் கவனம் செலுத்துகிறார்களோ அவர்களுக்கு அது வழங்கப்படுகின்றது. மேலும், யார் அதனுடைய விபரீதங்களைப் பயப்படுகிறார்களோ அவர்கள், அவற்றிலிருந்து பாதுகாக்கப்படுவர். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
யார் நற்செயலில் கவனம் செலுத்துகிறாரோ அவருக்கு அது வழங்கப்படுகிறது. மேலும், யார் கெடுதிகளைப் பயப்படுகிறாரோ அவர் அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவார்.

(நூல்: அல்பானீ: ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா: (342))

3) மண்ணறையின் வேதனைகள், இன்பங்கள் போன்றவற்றை அறிந்து கொள்ளல்.

மண்ணறையின் வேதனைகள், இன்பங்கள் பற்றிய குர்ஆன் வசனங்களையும், ஹதீஸ்களையும் படிப்பதில் நிச்சயமாக படிப்பினை இருக்கிறது. ஏனெனில், அல்லாஹ்வின் கோபத்தைத் தேடித்தரக் கூடியவற்றிலிருந்து நாவைப் பேணிக்கொள்வதற்கு மண்ணறையில் மனிதனின் நிலைபற்றி அறிந்திருப்பது மட்டுமே போதுமானது. அவ்வாறே அதனுடைய இன்பங்கள் பற்றி அறிந்திருப்பது, நாவினால் தீயவற்றைச் செய்து விடாது பொருமையுடன் இருக்கத் தூண்டுகிறது. நாவை அடிக்கிக் கொள்ள ஆர்வமூட்டுகின்றது.

4) நரக வேதனையைத் தெளிவுபடுத்துகின்ற குர்ஆன் வசனங்கள், நபிமொழிகள் போன்வறவற்றை அறிந்து கொள்ளல்.

யாராவது நரகத்தைப்பற்றிய செய்திகளைச் சரியாக விளங்கிக் கொண்டால், அவரது பார்வையில் உலகமும் அதிலுள்ள இன்பங்களும் அற்பமாகி விடுகிறது. இதனால் ஒரு வார்த்தை தன்னுடைய நாவிலிருந்து வெளிவர முன்னர், அதன் கணத்தையும் விபரீதத்தையும் அவன் கணக்கிட்டுக் கொள்வான். இதன் மூலம் தன்னை நரக வேதனையிலிருந்தும், அதனுடைய அகோரத்திலிருந்தும் காத்துக் கொள்வதற்கு முயற்சி செய்வான்.